# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆம் திகதிய*
## *பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2023.07.11 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்)

***ஒரு தேர்தல் மனுவை முன்வைப்பதற்கான காலப்பகுதியை நீடிப்பதற்காகவும் குற்றப் பணங்களை அதிகரிப்பதற்காகவும் ஏற்பாடுசெய்வதற்கும்; (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தையும், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தையும், 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தையும்; மற்றும் 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத்தையும் திருத்துவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்***

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : *ரூபா 18.00***  **தபாற் செலவு : *ரூபா 150.00***

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்)

*ச.வ.ஓ - 9/2023*

***ஒரு தேர்தல் மனுவை முன்வைப்பதற்கான காலப்பகுதியை நீடிப்பதற்காகவும் குற்றப்பணங்களை அதிகரிப்பதற்காகவும் ஏற்பாடுசெய்வதற்கும்; (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தையும், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தையும், 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தையும்; மற்றும் 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத்தையும் திருத்துவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயர்*

***1.*** இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின்        ஆம் இலக்க, தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

## பாகம் I

## *(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்துக்கான திருத்தங்கள்*

*முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப் பட்ட 262 ஆம் அத்தியாயத்தின் குறித்தசில பிரிவுகளைத் திருத்துதல்*

***2.*** இதற்கான முதலாம் அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள், அத்தகைய பிரிவுகளிற் குறித்துரைக்கப்பட்ட குற்றப்பணங்களை அதிகரிக்கும் நோக்கத்துக்காக அவ்வட்டவணையின் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவிற் குறித்துரைக்கப்பட்ட சொற்களுக்குப் பதிலாக, நிரல் III இலுள்ள நேரொத்த பதிவிற் குறித்துரைக்கப்பட்ட சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றன.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 82கா என்னும் பிரிவைத் திருத்துதல்*

**3.** இரண்டாயிரத்து இரண்டாமாண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 82கா என்னும் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், "தேர்தல் முடிவு கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இருபத்தொரு நாட்களுக்குள்ளாகச்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தேர்தல் முடிவு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நாற்பத்திரெண்டு நாட்களுக்குள்ளாகச்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

பாகம் II

## 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்துக்கான திருத்தங்கள்

*இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப் பட்ட 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தின் குறித்தசில பிரிவுகளைத் திருத்துதல்*

**4.** இதற்கான இரண்டாம் அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில், "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் பிரிவுகள், அத்தகைய பிரிவுகளிற் குறித்துரைக்கப்பட்ட குற்றப் பணங்களை அதிகரிக்கும் நோக்கத்துக்காக அவ்வட்டவணையின் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவிற் குறித்துரைக்கப்பட்ட சொற்களுக்குப் பதிலாக, நிரல் III இலுள்ள நேரொத்த பதிவிற் குறித்துரைக்கப்பட்ட சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றன.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 108 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 108 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், "அத்தேர்தல் முடிவு கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இருபத்தொரு நாட்களுக்குள்ளாகச்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தேர்தல் முடிவு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நாற்பத்திரெண்டு நாட்களுக்குள்ளாகச்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

பாகம் III

## 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்துக்கான திருத்தங்கள்

*முன்றாம் அட்டவணையிற் குறித்துரைக்கப் பட்ட 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் குறித்தசில பிரிவுகளைத் திருத்துதல்*

**6.** இதற்கான மூன்றாம் அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில், "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் பிரிவுகள், அத்தகைய பிரிவுகளிற் குறித்துரைக்கப்பட்ட குற்றப்பணங்களை அதிகரிக்கும் நோக்கத்துக்காக அவ்வட்டவணையின் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவிற் குறித்துரைக்கப்பட்ட சொற்களுக்குப் பதிலாக, நிரல் III இலுள்ள நேரொத்த பதிவிற் குறித்துரைக்கப்பட்ட சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றன.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 102 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 102 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், "தேர்தல் முடிவு கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இருபத்தொரு நாட்களுக்குள்ளாகச்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தேர்தல் முடிவு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நாற்பத்திரெண்டு நாட்களுக்குள்ளாகச்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது.

பாகம் IV

## 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத்துக்கான திருத்தங்கள்

*நான்காம் அட்டவணையிற் குறித்துரைக்கப் பட்ட 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தின் குறித்தசில பிரிவுகளைத் திருத்துதல்*

**8.** இதற்கான நான்காம் அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில், "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத்தின் பிரிவுகள், அத்தகைய பிரிவுகளிற் குறித்துரைக்கப்பட்ட குற்றப்பணங்களை அதிகரிக்கும் நோக்கத்துக்காக அவ்வட்டவணையின் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவிற் குறித்துரைக்கப்பட்ட சொற்களுக்குப் பதிலாக, நிரல் III இலுள்ள நேரொத்த பதிவிற் குறித்துரைக்கப்பட்ட சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றன.

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 108 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், ''அத்தேர்தல் முடிவு கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இருபத்தொரு நாட்களுக்குள்ளாகச்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அத்தேர்தல் முடிவு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நாற்பத்திரெண்டு நாட்களுக் குள்ளாகச்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத் தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 108 ஆம் பிரிவைத் திருத்துதல்

**10.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**முதலாம் அட்டவணை**

[பிரிவு 2]

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| திருத்தப்பட்ட பிரிவுகள் | நீக்கவும் | உட்புகுத்தவும் |
| 11 | நூறு ரூபா | ஐம்பதாயிரம் ரூபா |
| 18(6) | நூறு ரூபா | ஐம்பதாயிரம் ரூபா |
| 39அ(3) | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 39அ(3அ) | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 39ஆ(1) | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 43 | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 52(2) | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 53அ(4) | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 77 | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 78(1) | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 81அ(3) | நூறு ரூபா | ஐம்பதாயிரம் ரூபா |
| 81ஆ(2) | நூறு ரூபா | ஐம்பதாயிரம் ரூபா |
| 82உ(1) | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 82ஊ(1) | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 82ஔ(1) | முந்நூறு ரூபா | ஒரு இலட்சம் ரூபா |
| 82க(1) | முந்நூறு ரூபா | ஒரு இலட்சம் ரூபா |
| 84அ(2) | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 85அ | ஐம்பது ரூபா | இருபத்தையாயிரம் ரூபா |
| இரண்டாம் அட்டவணை | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |

## இரண்டாம் அட்டவணை

[பிரிவு 4]

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| திருத்தப்பட்ட பிரிவுகள் | நீக்கவும் | உட்புகுத்தவும் |
| 5 | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 18 | ஆயிரம் ரூபா | நான்கு இலட்சம் ரூபா |
| 26(1) | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 27(3) | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 27(4) | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 43(3) | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 67(2) | ஆயிரம் ரூபா | நான்கு இலட்சம் ரூபா |
| 68(1) | நூறு ரூபா | ஐம்பதாயிரம் ரூபா |
| 68(2) | நூறு ரூபா | ஐம்பதாயிரம் ரூபா |
| 69 | நூறு ரூபா | ஐம்பதாயிரம் ரூபா |
| 70 | நூறு ரூபா | ஐம்பதாயிரம் ரூபா |
| 72 | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 73(3) | நூறு ரூபா | ஐம்பதாயிரம் ரூபா |
| 74(2) | நூறு ரூபா | ஐம்பதாயிரம் ரூபா |
| 75(1) | நூறு ரூபா | ஐம்பதாயிரம் ரூபா |
| 76(6) | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 81(1) | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 82(1) | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 87(1) | முந்நூறு ரூபா | ஒரு இலட்சம் ரூபா |
| 88(1) | முந்நூறு ரூபா | ஒரு இலட்சம் ரூபா |
| 121(2) | ஐம்பது ரூபா | இருபத்தையாயிரம் ரூபா |
| 122(2) | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |

## மூன்றாம் அட்டவணை

[பிரிவு 6]

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| திருத்தப்பட்ட பிரிவுகள் | நீக்கவும் | உட்புகுத்தவும் |
| 6 | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 23(1) | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 24(3) | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 24(4) | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 41(3) | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 67(2) | ஆயிரம் ரூபா | நான்கு இலட்சம் ரூபா |
| 68(1) | நூறு ரூபா | ஐம்பதாயிரம் ரூபா |
| 68(2) | நூறு ரூபா | ஐம்பதாயிரம் ரூபா |
| 69 | நூறு ரூபா | ஐம்பதாயிரம் ரூபா |
| 70 | நூறு ரூபா | ஐம்பதாயிரம் ரூபா |
| 72 | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 73(3) | நூறு ரூபா | ஐம்பதாயிரம் ரூபா |
| 74(2) | நூறு ரூபா | ஐம்பதாயிரம் ரூபா |
| 75(6) | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 80(1) | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 81(1) | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| 86(1) | முந்நூறு ரூபா | ஒரு இலட்சம் ரூபா |
| 87(1) | முந்நூறு ரூபா | ஒரு இலட்சம் ரூபா |
| 109(2) | ஐம்பது ரூபா | இருபத்தையாயிரம் ரூபா |
| 110(2) | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |

## நான்காம் அட்டவணை

[*பிரிவு 8*]

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *திருத்தப்பட்ட பிரிவுகள்* | *நீக்கவும்* | *உட்புகுத்தவும்* |
| *6* | ஆயிரம் ரூபா | நான்கு இலட்சம் ரூபா |
| *16* | ஆயிரம் ரூபா | நான்கு இலட்சம் ரூபா |
| *24(1)* | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| *25(3)* | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| *25(4)* | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| *41(3)* | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| *64* | நூறு ரூபா | ஐம்பதாயிரம் ரூபா |
| *67(2)* | ஆயிரம் ரூபா | நான்கு இலட்சம் ரூபா |
| *68(1)* | நூறு ரூபா | ஐம்பதாயிரம் ரூபா |
| *68(2)* | நூறு ரூபா | ஐம்பதாயிரம் ரூபா |
| *69* | நூறு ரூபா | ஐம்பதாயிரம் ரூபா |
| *70* | ஆயிரம் ரூபா | நான்கு இலட்சம் ரூபா |
| *72* | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| *73(3)* | நூறு ரூபா | ஐம்பதாயிரம் ரூபா |
| *74(2)* | நூறு ரூபா | ஐம்பதாயிரம் ரூபா |
| *75(1)* | நூறு ரூபா | ஐம்பதாயிரம் ரூபா |
| *76(3)* | ஆயிரம் ரூபா | நான்கு இலட்சம் ரூபா |
| *77(6)* | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| *82(1)* | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| *83(1)* | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| *88(1)* | முந்நூறு ரூபா | ஒரு இலட்சம் ரூபா |
| *89(1)* | முந்நூறு ரூபா | ஒரு இலட்சம் ரூபா |
| *123(2)* | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |
| இரண்டாம் அட்டவணை விடயம் *9(4 )* | ஐந்நூறு ரூபா | இரண்டு இலட்சம் ரூபா |